## வறுமை குறைப்பு சிறு நிதி செயற்திட்டம் II- 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட ஜென் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 86,164,186 மற்றும் ரூபா 75,192,019 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் மற்றும் செலவினங்கள் முறையே ரூபா 84,198,850 மற்றும் ரூபா 58,039,868 தொகையாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு செயற்திட்டத்தின் வருமானம் மற்றும் செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| விபரங்கள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆண்டு | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| | ரூபா | ரூபா |
| வருமானம் | 86,164,186 | 84,198,850 |
| கழி: செலவினம் | 75,192,019 | 58,039,868 |
| செலவினத்திற்கு மேலான வருமானம் | 10,909,948 | 26,158,982 |

### 2.2 விசேட யென் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின் படி, மீளாய்வாண்டிற்காக இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட விசேட யென் கணக்கு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் பொழிப்பொன்று பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரங்கள் | ஜப்பான் யென் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 71,164,186 | 104,390,744 |
| கூட்டு: மீள்நிரப்பல்கள் | 313,706,073 | 494,575,077 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 2,693,795 |
| | 384,870,259 | 601,659,616 |
| கழி:- பற்றுதல்கள் | 384,870,259 | 601,659,616 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விசேட யென் கணக்கின் முன்கொண்டுவரப்பட்ட மீதி ரூபா 102,796,667 ஆக இருந்தது. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியால் தயாரிக்கப்பட்ட வங்கிள் கூற்றுக்களின்படி, விசேட யென் கணக்கின் நேரொத்த மீதி ரூபா 104,390,744 ஆக இருந்தது. ரூபா 1,594,077 ஆன வேறுபாடு இனங்காணப்படாமல் வெளிநாட்டு நாணய மாற்று இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்காக மோட்டார் வாகனங்களிற்காக சாட்டுதல் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு தவறான கணிப்பீடுகள் காரணமாக ரூபா 267,445 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்திட்டத்தின் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் போது வழங்கப்படுவதற்கு பாதிடப்பட்ட கடன் எண்ணிக்கை மற்றும் எய்தப்பட்ட உள்ளபடியான இலக்குகளும் முரண்களும் ஒப்பிடப்பட்டு பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| மாகாணங்கள் | 2012 இற்கான இலக்குகள் | | 2012 இன் உள்ளபடியானவை | | முரண்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | ரூபா மில் | கடன்களின் எண்ணிக்கை | ரூபா மில் | கடன்களின் எண்ணிக்கை | % | ரூபா மில் | % |
| வடக்கு | 14,740 | 725 | 2,554 | 194 | (12,186) | 82 | (531) | 73 |
| கிழக்கு | 3,435 | 179 | 4,909 | 295 | 1,474 | 43 | 116 | 64 |
| ஏனையவை * | 5,850 | 346 | 2,653 | 163 | (3,197) | 54 | (183) | 53 |
| மொத்தம் | 24,025 | 1,250 | 10,116 | 652 | (13,909) | 58 | (598) | 48 |

* புத்தளம், அநுராதபுரம், பொலனறுவை, பதுளை, மொனறாகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் ஏனைய மாவட்டங்களுக்கு உள்ளடக்கப்படுகின்றன.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கில் இனங்காணப்பட்ட மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் நலனாளிகளிற்கு இடையில் விநியோகிப்பதற்கு ரூபா 1,250 மில்லியன் தொகையான 24,025 கடன்கள் திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 10,116 கடன்களான அல்லது 58 சதவீதம் மாத்திரமும் ரூபா 652 மில்லியன் தொகையான அல்லது 48 சதவீதமான அளவும் நலனாளிகளிற்கிடையே வழங்கப்பட்டிருந்தன. இது செயற்திட்டத்தின் குறைவான செயலாற்றலை வெளிப்படுத்தியது.

(ஆ) மொத்தகடன்பட்டோலையில்,பட்டியலிடப்பட்ட14,740கடன்எண்ணிக்கைஅல்லது 61 சதவீதம் மற்றும் ரூபா 725 மில்லியன் கடன் தொகை அல்லது 58 சதவீதம் வட மாகாணத்திற்காக பங்கீடு செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 194 மில்லியன் தொகையான 2,554 கடன்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. இது மாகாணத்தில் செயற்திட்ட நலனாளிகளின் தவறான முற்கணிப்பிடலே பிரதான காரணமாக இருந்தது.

## 3.3 நிதிகளின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு

கடன் உடன்படிக்கையின் 1 ஆம் பட்டோலையின் 2 ஆம் பிரிவின்படி, 2008-2012 வரையான காலத்திற்காக செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு ஜப்பான் யென் 2,525 மில்லியனாகும். எவ்வாறாயினும், முழுச் செயற்திட்ட காலத்தின் போதான மொத்தப் பகிர்வுகள் ஜப்பான் யென் 2,038 மில்லியனாகும். ஆதலால், ஒதுக்கப்பட்ட கடன் மொத்த ஒதுக்கீட்டில் 81.71 சதவீதமாக மாத்திரம் இருந்ததென குறிக்கின்றது.

## 3.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கடன் உடன்படிக்கையின் 4 ஆம் பட்டோலையின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு உத்தியோகத்தர் சேர்ப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுதல் என்பவற்றிற்காக ஜேபீஐசீ இன் முன்னைய ஒத்திசைவு பெறப்படாமை காரணமாக ஆலோசனை மற்றும் இயலளவு அபிவிருத்தி கூறின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் சமர்ப்பிக்கப்பட்ட மீள்நிதியளிப்பு விண்ணப்பம் ஜேபீஐசீ ஆல் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆலோசனையாளர்கள் சேர்ப்பிற்காக பின்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,797,684 தொகையான பயிற்சி மற்றும் வேதனங்களில் ஏற்பட்ட கிரயம் 2013 செப்தெம்பர் இறுதிவரை ஜேபீஐசீ ஆல் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5. இணக்கம் செய்யப்படாத மீதிகள்

மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி தொடர்பில், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கப்பெற்றிருந்த மீள்சுழற்சி கடன் கணக்கு மீதிகளிற்கும் இதனோடொத்த பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் (பிஎவ்ஐஎஸ்) வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல்கள் இணக்கம் செய்யப்பட்டிராமையால் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.